உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆூ ஆகஸ்ட் மீ [இதழ் அ.

இலௌகிகப் பகுதி.

விஷயக் கோத்து.

இந்த ஆகஸ்ட் மீ 4-ம் உயோடு இங்கிலாந்து சண்டை ஆரம்பித்து ஒரு வருஷமானதால் அன்று நாடெங்கும் கைலரென்னும் இக்கலியுக இராவணன் கொட்டத்தை யடக்க ஜனங்கள் கடவுளைப் பிரார்த்தித்துக் கங்கணம் பூண்டார்கள்.

* * *

இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் சண்டையானது தர்ம ஸம்ஸ்தாபனத்திற்காக நடப்பதால் இதன் கஷ்டங்களைப் பார்த்த பிறகு உலகத்தில் சண்டையே இராதென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். பொறாமை, பேராசை, சுயநலம்பாராட்டல் முதலிய தூர்க்குணங்களே எங்கும் சண்டைக்குக் காரணமாகும். இவைகளோ சண்டைக்காலத்தை விடச் சமாதான காலத்திலேயே எத்தேசத்திலும் விருத்தியடைகின்றன. இத் தூர்க்குணங்களை மாற்ற ஜன சமூகத்தில் அன்பு, அருள், சகோதர பாவம், பொது நன்மை நாடல் முதலிய நற்குணங்கள் பெருகிப் பொங்கவேண்டும். இவை யுண்டாகாத வரையில் உலகத்தில் சண்டையை நிறுத்தமுடியுமா?

* * *

தற்காலச் சண்டையில் ஒரு விசேஷம். ஜர்மானியரிடத்தில் கூடாரங்களில்லை. இதற்குமுந்தி, சண்டைக்காலங்களில் சேனைகளுக்குக் கூடாரங்கள் கொண்டுபோவதும் அடிப்பதும் பெருத்த வேலையாயிருந்தது. இப்பொழுதோ ஜர்மானியர் தங்கள் விரோதிகள் தேசத்தில்தான் சண்டை செய்கிறதென்றும், தாங்கள் ஜயித்த நாட்டிலுள்ள வீடுகளிலேயே சேனைகளை இறக்கிவிடுகிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

***

ஜர்மானியர்கள் தற்காலம் பிராஞ்சு தேசத்தில் கைக்கொண்டிருக்கும் 10 மாகாணங்களிலிருந்தும் பெல்ஜியத்திலிருந்தும் அநேகம் கிழவர்களும் கிழவிகளும் குழந்தைகளும் பரீஸ் நகரத்தில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்கள். சண்டை செய்ய யோக்கியதையுடைய மற்றெல்லோரும் ரணரங்கத்திலிருக்கிறார்களென்பது சொல்லவேண்டுவதில்லை. இவ் வருஷத்திலேயே சண்டை முடிந்தாலும் அவர்கள் குடியும் குடித்தனமுமாவதற்குச் சுமார் ஒரு வருஷம் செல்லும். அவர்கள் இப்பொழுது பட்டுக்கொண்டிருக்கும் கஷ்டத்தைச் சொல்லிமுடியாது. ஆகையால் இந்தியாவை நன்றா யறிந்தவராகிய ஜான் லா என்னும் ஒரு ஆங்கிலேய கிரந்த கர்த்தா, பரீஸ் நகரத்தில் இந்த ஜனங்கள் கூடும் ஒரு தெருவில் தினந்தோறும் ஒருதடவையேனும் அவர்களுக்கு ரொட்டி, சூப்பு, காபி முதலியன கொடுத்துதவ, இந்தியர்கள் பேரால் ஒரு கப்பே அல்லது கஞ்சித்தொட்டி ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறார். நமது இந்திய சிப்பாய்கள் பிராஞ்சு தேசத்து ஜனங்களிடமிருந்து அதிக உதவிபெற்றிருப்பதால், நாமும் அவ்விடத்திய ஜனங்களுக்கு இவ் வுதவிபுரிவது இந்தியர்களின் நன்றியறிதலையும் தர்ம சிந்தனையையும் காட்டும். இதற்குப் பொருளுதவிபுரிய எண்ணுவோர், ஷெ லா துரையவர்களால் தம் ஏஜண்டாக நியமிக்கப்பட்ட மைலாப்பூர் ம. ள-ள-ஸ்ரீ டாக்டர் நஞ்சுண்டராவ் அவர்களுக்குத் தங்கள் நன்கொடையை அனுப்பினால் அவர் அதை 'ஹிந்து' பத்திரிகை வாயிலாக ஏற்றுக்கொண்டு இந்த அன்னதான தர்மத்திற்கு விநியோகஞ் செய்வார்.

***

ஆகார பதார்த்தங்களிலும் மருந்துப் பதார்த்தங்களிலும் வேறு பதார்த்தங்களைக் கலந்துவிற்கும் வழக்கத்தைத் தடுக்க இந்தியா கவர்ன்மெண்டார் சீக்கிரத்தில் ஒரு சட்டம் செய்யப் பிரயத்தனஞ் செய்து வருகிறார்கள். அப்படமான பால், தயிர், நெய், காப்பித்தூள், கஸ்

தூரி, குங்குமப்பூ முதலியன கிடைக்கும் காலத்தை யார்தான் விரும்பார்கள்?

*
* *

கலப்படமான பாலைக் கண்டுபிடிக்க ஓர் சுலபமான வழி. நன்ருய் மெருகிட்ட ஓர் பின்னல் ஊசியைப் பால் வைத்திருக்கும் பாத்திரத்தில் செங்குத்தாய்த் துவைத்து நேரே தூக்கினுல், ஸ்வயமாயிருந்தால் அதில் பால் ஒட்டிக்கொள்ளுமென்றும் கொஞ்சமேனும் நீர் கலந்திருந்தால் அது ஒட்டாதென்றும் சொல்லப்படுகிறது.

*
* *

மதராஸ் பாங்கில் இந்தியர்களும் பலர் பங்குக்காரர்களாயிருந்து ஏராளமாய்த் தங்கள் பணத்தையும் கொடுத்திருக்கிருர்கள். நமது வியாபாரிகளும் விசேஷமாய் அங்குக் கடன்வாங்கி வருகிருர்கள். இப்படியிருந்தும் அந்த பாங்கின் நிர்வாக சபையில் ஒரு இந்தியர் கூட இல்லை. விசேஷமாய் "Chamber of Commerce" என்று சொல்லும் வியாபார சங்கத்தின் அங்கத்தினராயிருக்கும் ஐரோப்பியர்களே இருக்கின்ருர்கள். இதைக் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக்காட்டியபோது, அவர்கள் பங்குக்காரர்கள் இந்தியர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளாத குற்றத்திற்குத் தாங்கள் ஒன்றுஞ் செய்யமுடியாதென்று சொல்லுகிருர்கள். நம்மவர்களோ பாங்குகளிலும் பண்டுகளிலும் பணத்தைப் போட்டுவிட்டுத் தூங்குகிருர்களே யொழிய அவைகள் எப்படி நடைபெறுகின்றனவென்று கவனித்து வருவதில்லை. இவ் வழக்கம் எப்பொழுது மாறுமோ!

*
* *

உற்சவ காலங்களில் பெரிய ஸ்தலங்களில் யாத்திரைக்காரர்கள் படும் கஷ்டங்களை நிவர்த்திக்கும் உத்தேசத்துடன் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு யாத்திரைக் கமிட்டி நியமித்திருக்கிருர்கள். அந்தக் கமிட்டியார் இம் மாதம் முதலில் தங்கள் யாத்திரையை ஆரம்பித்து இராமேசுவரம் தனுஷ்கோடி மதுரை திருப்பரங்குன்றம் திருச்செந்தூர் முதலிய ஸ்தலங்களைப் பார்த்தார்கள். இப்படியே ஸ்தலங்கள் தோறும் சென்று கோயில்கள் சத்திரங்கள் ஜலாசயங்கள் மலஜல விஸர்ஜனத்திற்குள்ள வசதிகள் முதலியவைகளைப் பார்த்து விசாரித்து வருவார்கள். இவர்கள் செய்யும் வேலையினுலும் ரிப்போர்ட்டினுலும் ரெயில் பிரயாணத்திலும் ஸ்தலங்களிலும் ஜனங்களுக்குச் சௌகரியமுண்டாஞல் இவர்கள் இப்பொழுது செலவிடும் பொருள் வீணுகாது.

*
* *

ஸ்ரீ பிருகதாம்பாள் தாஸன் ராஜாமார்த்தாண்ட பைரவத் தொண்டமான் பஹதூர் எனத் திருநாமம்பூண்ட புதுக்கோட்டை ஸமஸ்தானம் மகாராஜா அவர்கள், சென்ற 10-ம் உ செவ்வாய்க்கிழமை யன்று ஒரு ஆஸ்திரேலியா தேசத்து லேடியைக் கலியாணம் செய்துகொண்டதாய்த் திவானுக்குத் தந்தி வந்ததாகவும், ஜனங்களுக்கு அது ஒருபக்கம் ஆச்சரியத்தையும் ஒருபக்கம் சந்தோஷத்தையும் விளைவித்ததாயும் 11-ம்உ ஹிந்து பத்திரிகையால் தெரியவருகிறது. ஆகிலும் இதில் ஒரு சந்தேகம். இந்தப் பெண்மணிக்குப் பிறக்கும் பிள்ளை பட்டத்திற்கும் ஸ்ரீ பிருகதாம்பாள் தாஸனெனப் பெயர் பூணுவதற்கும் அரண்மனையின் பிராசீன தர்மங்களை நிறைவேற்றுவதற்கும் யோக்கியமாகுமா? அது அந்த ராஜ தம்பதிகளுக்கும் இங்கிலாந்து சக்கரவர்த்தி அவர்களுக்கும் மாத்திரம் தெரிந்த இரகசியமாயிருக்கலாம். ஆகிலும் குடிகளும் இப் பெருத்த விஷயத்தை யறிய ஆவலாயிருப்பது இயற்கைதானே?

*
* *

கோதாவரி ஜில்லா அமலாபுரத்தில் தற்காலம் முனிசீப்பு அலுவல் பார்க்கும் இராஜலிங்க சாஸ்திரி என்பவர், இந்தியாவின் நன்மைக்காக மிகவும் பாடுபட்டு நாஷனல் காங்கிரெஸை ஸ்தாபித்த ஹியூம் என்னும் ஆங்கிலேய கனவான் பெயரைத் தம் மைந்தனுக்கு வைத்தார். சென்ற 16-ம் உ திங்கட்கிழமை அந்த ஹியூம் சாஸ்திரி என்பவர் சென்னை ஹைக்கோர்ட்டில் வக்கீலாக அங்கீகரிக்கப்பட்டார். இனி முகமது இஸ்மயத்துல்லா சாஸ்திரி யென்னும் பெயரும் கேள்விப்படலாம்போலும்!

மணிதாசன்.

பால சிக்ஷை.

4-வது 5-வது வயது.

அறிவுப் பயிற்சி.

(வெண்டாமரை ௩, 110-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனப் பயிற்சி.

அறிவை வளர்த்தற்கும், சன்மார்க்க நெறியில் நிற்றற்கும் மனம் இன்றியமையாததாகும். நாம் செய்யும் செய்கைக ளனைத்திற்கும் மனமே மூலகாரணம். செய்தற்பாலன எவை, தவிர்த்தற்பாலன எவை,

என்று அறிதல் மாத்திரம் அத்தனை யருமையன்று. நூலொடு பழகிய நுண்ணறிவில்லாச் சாமானியர்களும் முற்றுமுணர்ந்த முழு ஞானிகளைப் போலவே தர்மாதர்மத்தின் பேதாபேதங்களை இயற்கை யுணர்ச்சியினுலும் அனுபவ ஞானத்தாலும் சிறிது அறிந்தேயிருக்கின்றனர். ஆயினும், சிலர் தீவழிப்படுதற்கும், வேறு சிலர் நேர்நெறி நிற்றற்கும் மனமே காரணமாகின்றது. எவனெருவன் தன் மனதை யடக்கியாளும் திறமுடையவனுய், மனம்போன வழியெல்லாம் தான் செல்லாமல் சரிவழியில் தன் மனத்தை நடத்தும் ஆற்றலுடையவனே அவனே உத்தமனென்றும் புருஷார்த்தங்களை யடைதற்குரியவனென்றும் நீதி நூற்களெல்லாம் முறையிடுகின்றன.

ஆக்குதற்கும் அழித்தற்கும் மனமே காரணமென்பதைக் குறித்துத் தமிழ் நூற்களில் எவ்வளவோ எடுத்துக் கூறப்பட்டுள்ளன. மனதின் இயல்பை முற்று முணர்ந்த ஞானிகளும் காப்பியக் கவிகளும், அதைக் குரங்கென்றும், கூற்றென்றும், மாயப் பேயென்றும் பலபலவாறு பகர்ந்திருக்கின்றனர். நம்மை அறனெறியினின்று அகற்றுவதற்கு, நம் முன் குரங்குபோலப் பல்வேறு சேட்டைகள் செய்து, பேய்கோட்பட்டாரைப் போல நம்மை ஆட்டுவித்து, நம்மறிவை யுண்ணும் கூற்ருய் நிற்பது மனமே.

ஆண்மையும், சாத்திரப் பயிற்சியும் ஒருவற்கு எத்துணை யிருப்பினும், தன் மனதை யடக்கியாளும் வலியின்றேல் மற்றவற்ருல் அவனெய்தும் பயன் ஒன்றுமின்று. கயிலையங்கிரியைப் பெயர்த்தெறிவேனென்ற அஞ்சா நெஞ்சும், சாமவேத கீதத்தால் சிவபிரானையும் மயக்கிய முழுப் புலமையும் வாய்த்திருந்தும், புன்னெறியிற் சென்ற தன் மனதை யடக்கியாளும் ஆற்றலற்ற தசக்கிரீவனே இதற்கிலக்காய் நிற்கின்ருன்.

மேற்கூறியவற்ருல் அறிவுப் பயிற்சி வேறென்பதும், மனதை இளமையினின்றே பயிற்சி செய்துவருதல் அத்தியாவசிகமென்பதும் விசதமாகின்றன. மூன்று நான்கு வயதிலிருந்தே மனது அறிவின் வசப்பட்டு, செய்கடனேடு பருந்து நிழலுமெனச் செல்லுமாறு பழக்கி வரவேண்டும். சில குழந்தைகளிடத்தில் தாங்கள் பிடித்த பிடியை விடாத மனேவிகாரம் காணப்படுதல் அரிதன்று. அன்னவர் மனதை முறைப்படி நேர்படுத்தவேண்டும். அவர்களை யடித்தும் தண்டித்தும் திருத்த முயல்வது தவறு. அவர்கள் மனவலியை யழித்து நமக்கு அடங்கித் தற்காலம் நமது சொற்படி நடக்கச் செய்வதினுல் மாத்திரம் யாது பயன்? நமது பராமரிப்பு அற்றவுடன் அவர்களது மனக்கோணல்

மீண்டும் தோன்றுமன்றோ? அன்றியும், இத்தகைய கண்டிதப் பயிற்சியினால் தம் மனதை யாளும் சக்தியை அவர்கள் விரைவில் இழந்துபோகின்றனர். இக்காலத்தில் நமது இந்துக்கள் வெகு பலர் மனத்திடனற்றிருப்பதற்கு, குழந்தைகள் மனப் பயிற்சியில் நம்மவர் அனுசரிக்கும் தவறான முறையே முக்கிய காரணம். பலவந்தத்தில் எதொன்றையும் செய்து தீர்வதற்கு மாறாக, குழந்தைகள் மனதை அறிவென்னுந் தீபத்தினால் விளக்கி, செய்கடன்மீது மனம் இயல்பாகச் சாயும் வண்ணம் பழக்கி வருதலே முறையென்க.

மிருகங்களுக்குப் போலவே மனிதர்கட்கும் இயல்பான விருப்பும் வெறுப்பும் உண்டு. ஆனால், நமக்கும் பிற ஜெந்துக்களுக்கும் பேதமென்னவெனில், நமது அவா எத்துணை வலியதாயினும் அதனை வெல்லும் மனவூக்கம் நமக்கு மாத்திரமே யுண்டு. இத்தகைய மனவலியைக் குழந்தைகளிடத்தில் விருத்திசெய்து வருவதே பாலசிக்ஷையின் முக்கிய அமிசமாகிய மனப் பயிற்சி யெனப்படும்.

எதொன்றையும் செய்தற்கு முன்னர், தீர்க்காலோசித்தல், தீர்மானித்ததை எவ்விடையூறு வரினும் செய்தே தீர்த்தல், பழக்கத்தினால் மனதைச் செய்கடனோடு ஒருங்குபடுத்தல் இவை மனப் பயிற்சியில் அனுசரிக்கவேண்டிய முக்கிய உபாயங்களென்பர் உளநூற் புலவர். இதைப்பற்றியே "எண்ணித்துணிக கருமம்" என்றார் தெய்வப்புலவரும். நாம் இழைக்கும் தவறுகட்கெல்லாம் யோசனைக் குறைவே முக்கிய காரணமாகின்றது. "அந்தோ! சற்று ஆலோசித்திருப்பின் இப்பிழை செய்திரேனே" என்று நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து புலம்புவது தினமும் நம் செவிப்படுகின்றதன்றோ! ஆதலின், யாதொரு கருமஞ் செய்யினும் எண்ணிச் செய்யக் குழந்தைகளைப் பழக்கிவருவது நமது முக்கிய கடமை.

எண்ணித் துணிந்ததை எது நேரினும் கைசோரவிடாமல் நிலைநிறுத்துதலும் வேண்டும். இத்தகைய மனத்திடனாலேயே பகீரதன், அரிச்சந்திரன், மநுச்சோழன், துருவன் முதலியோர் இவ்விரு சுடர் வழங்கும் வையத்துள் என்றுஞ்செல்லா நல்லிசை நிறுவிக்கொண்டனர்.

தக்கிது, தகவிலதிது வென்று எண்ணித் தேர்ந்தபின், ஐம்பெரும் பூதமெல்லாம் அடுக்கழிந் தொழியினும் கம்பமின்றி நிற்றலே மனவலியின் இலக்கணமாகும்.

"நெற்றிக் கண்ணைக் காட்டினுங் குற்றங் குற்றமே" என்ற நக்கீரர் மனவலியன்றோ மனவலியெனப்படுவது. இத்தன்மைய மன

165

வலி இக்காலத்தில் மருந்துக்கும் கிடைத்தற் பாலதன்று. நம்மவரின் மனம் சோர்வடைதற்கு, சாக்ஷாத் பரமசிவனே பிரசன்னமாக வேண்டுவ தில்லை. அதிகாரத்திலோ, செல்வத்திலோ சற்று மேம்பட்டவர்கள் உரைப்பதற்கு எதிர்வாக்கில்லை. அன்னவர் குழறும் பிழைதழீஇய மொழியெலாம், மேடைத் தலையாட்டலால் ஆமோதிக்கப்படுமேயன்றி, சிறிதளவேனும் ஆக்ஷேபிக்கப்படுவதில்லை.

பயம், அவா, தன்னயம் முதலிய அற்ப வுணர்ச்சிகளே நமது மனோதைரியத்தை யழித்து நம்மை நேர்வழியினின்று விலக்குபவை. இத்தகைய இழி குணங்களின் அடிமைத்தனத்தினின்று தம்மை மீட்டுக் கொண்டு, எது சரியான வழியோ அதில் நியாயத்தால் நிதானிக்கும்படி இளமை தொட்டுக் குழந்தைகளைப் பழக்கி வருவதே மனப் பயிற்சி யாகும்.

(தொடரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

நமது நங்கையர்கள்.

(ஓர் புதிய கிளர்ச்சி.)

அப்பொழுதே என் நெஞ்சம் பொங்கிற்று. அநேக எண்ணங்களை என் சிந்தையிற் சுழற்றினள், தமிழ் நாட்டை விரைவில் உன்னத நிலை மைக்கு உயர்த்தத் திருவுளங்கொண்டிருக்கும் என் சரசுவதி தாய். அப் பொழுதே இவ்விஷயத்தை எழுதிப் பிரசுரிக்கவேண்டுமென்ற அவா எழுந்தது. எப்பொழுது? சென்ற ஜனவரி மாதத்துக் கலைமகள் சஞ்சி கையில் ஸ்ரீமதி வே. மங்கையர்க்கரசி, பொ. மு. என்ற சகோதரி, "இந்துப் பெண்களின் கல்வியும் அவர்கள் நிலைமையும்" என்று வரைந் திருந்த விஷயத்தைக் கண்ணுற்றவுடன். ஆனால் அவகாசக் குறைவால் நாளைக்கு எழுதலாம் நாளைக்கு எழுதலாம் என நாளைக் கழித்தேன். அவ் வாறு கழித்ததில் ஐயகோ! ஒரு சமயம் என்ன எண்ணிவிட்டேன்! "நான் எழுதுவதை யார் கவனிப்பார். வீணாகச் சிரமப்படுவதில் பயனென்ன. அன்றியும், நான் வற்புறுத்த விரும்பும் புதிய கிளர்ச்சியில் வெறுப்புற்ற பலரது நிந்தனைக்கும் பாத்திரமாகவேண்டும். என் எனக்கு இந்த வீண் வம்பு" என்றெண்ணித் தற்காலம் தமிழ் நாட்டில் தழைத்திருக்கும் சுய நலக் கொள்கையால் வெல்லப்பெற்றுச் சும்மாவிருந்துவிட்டேன். ஆனால்

கலைமகள் மே – ஜூன் மாதத்துச் சஞ்சிகையில் முற்கூறிய சகோதரி “கல்வியினு லடையும் நாகரிகமும் கல்லாமையால் அடையும் துன்பமும்” என்ற மற்ருெரு விஷயம் விடுத்திருந்ததைப் பார்த்தேன். என் பழைய எண்ணங்களை மீண்டும் என் சித்தத்தில் சுழற்றுகின்ருள் என் அன்னை. என்னென்னவோ எண்ணங்கள் பொங்கிக் கடைசியாய் நெடுநாளாக நினைத்திருந்த இவ்விஷயத்தை விளம்பத் துணிகின்றேன். யாவும் சாரதை யன்னையின் திருவிளையாடல் என்பது என் நம்பிக்கை. யாவரும் இந்தச் சத்தியத்தை நம்பவேண்டுமென்பது என் கோரிக்கை.

மானிட சமூகத்தில் பெண்பாலார் ஓர் முக்கிய பகுதியாராவர். துரைத்தனம், வியவசாயம், வர்த்தகம் முதலிய பல முக்கிய இலெளகிக காரியங்களெல்லாம் விசேஷமாக ஆடவர்களால் நிகழ்கின்றன என்பது உண்மையே. ஆயினும் இவ் வாடவர்களது தன்மைகளெல்லாம் பெண்பாலால் அமைக்கப்படுகின்றன. முதன் முதல் புருஷன் “தாய்” என்ற ஸ்திரீயின் ஆளுகைக் குட்பட்டிருக்கின்ருன். தந்தையின் ஆளுகையிலும் சற்று இருந்தபோதிலும் தந்தையை விடத் தாயின் நேரான ஆளுகைக் குட்பட்டிருப்பதற்குத்தான் மிகவும் அதிகமாகச் சந்தர்ப்பங்களிருக்கின்றன. அன்றியும், புருஷன் தன் தாய்க்குப் பின்பு தன் தாரத்தின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பராமரிப்புக்கும் உட்படுகின்றவனுகின்ருன். ஆகையால் சகோதரிகளே! சகோதரர்களே! வியப்படையாதேயுங்கள். பெண்பால்தான் உலகம் நிகழ்கின்ற தன்மைக்குக் காரணமாகின்ருள்.

ஒரு நாடு உன்னதமடைகின்றது அல்லது தாழ்வடைகின்ற தாயின், அந்த எற்றம் அல்லது வீழ்ச்சி அந்த நாட்டைச் சார்ந்த ஒவ்வொன்றிலும் பிரதிபலித்துத் தோன்றும். அவ்வாறிருக்க, சமூகத்தின் முக்கிய பகுதியாராகிய பெண்பாலாரிடத்தா அவ்வேற்ற வீழ்ச்சி தோன்ருது! ஆம் அவசியம்தோன்றும். ஒரு நாட்டின் பெண்களின் நிலைமையை அறிந்துகொண்டால் அந்த நாட்டின் நிலைமையை அறிந்துகொள்ளலாம். பெண்களிடம் அழகு, தூய்மை, கம்பீரம், கல்வி முதலிய நன்னலங்கள் துலங்கப்பெற்ற நாடு செழிப்பாயும் ஆநந்தமயமாயும் விளங்கும். இக் காரணம் பற்றித்தான் நமது கவிகள் ஒரு நாட்டின் சிறப்பைக் கூறும் பொழுது முக்கியமாய் நங்கையரைப்பற்றி விசேஷமாக வர்ணிக்கிருர்கள்.

இப்பொழுது நமது தமிழ் நாட்டுத் தையலரைப்பற்றிக் கவனிப்போமா. சுயநலம், மிக முற்றி வளர்ந்துள்ள சுயநலம், “யாருக்கு என்ன நேரிட்டபோதிலும், எந்தக்காரியம் எப்படிப்போயினும், நான், என்

கணவன், என் மகன் மகள் முதலிய என்னை மிக நெருங்கிச் சார்ந்துள்ளவர்கள் எவ்விதத்தாலாவது சௌக்கியமாய் வாழவேண்டும். எங்களுக்கு அணுவளவேனும் இலாபகரமாயில்லாத, எங்களுக்குத் தீனையளவேனும் இன்ன விழைப்பதாய்த் தோன்றுகிற எவ்விதக் காரியத்திலும் தலையிடவேகூடாது" என்பதாதிய கொள்கைகளை ஈனும் மிகக் கொடுமையான சுயநலக் கடலில் நமது பெண்கள் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கேற்பட்டிருக்கும் ஆசாரங்களோ அம்மம்ம! நினைக்க நினைக்க நிஜ தேசாபிமானிகள் நெஞ்சங்களைப் புண்ணாக்கி வருத்துகின்றன. விளையாட்டுக் குழந்தைகளுக்குக் கல்யாணம், பத்துப் பன்னிரண்டு வயதுக்கு மேல் பாலிகைகள் இல்லற முறைகளைப்பற்றிச் சகல உபதேசங்களும் பெற்றுச் சுயநலத் துவஜம் நாட்டிக் குடித்தனஞ் செய்தல், குழந்தை பெறுதல், ஐந்து வயது விதவை எட்டு வயது விதவை பத்துப் பன்னிரண்டு பதினைந்து பதினெட்டு இருபது முதலிய பல பருவங்களமைந்த விதம் விதமான விதவைகள், அவர்களுக்குரிய சிரோமுண்டனம் ஓர்வித உடைக்கட்டு ஓர்வித போஜனக் கட்டு முதலிய கட்டுப்பாடுகள் ஆகிய இந்த ஆசாரங்கள் ஓர்பால். குழந்தைப் பருவத்தில் விவாகமாகும் பாக்கியம் பெறாத பெண்ணோ, 12 வயது, 16, 18, 20, 25, 30, எத்தனை வயது வரையிலாயினுஞ் சரி அகத்திலேயே அடைபட்டு, அந்நிய புருஷரை ஜன்னல் வழியாகவும் திரைச் சந்து வழியாகவும் பார்த்துக்கொண்டு அடுப்பங்கரையில் அவிந்து புழுங்கிப்போயிருக்கும் தன் அழகிய உருவத்தை மாத்திரம் அந்நிய புருஷர் கண்களிற் படாதபடி மறைத்திருத்தல், இந்த நிர்ப்பந்தங்களினின்றும் விடுபடு நிமித்தமும் மற்றும் பல காரணங்களை முன்னிட்டும் தன் கழுத்தில் ஒரு புருஷன் எப்பொழுது மாங்கல்யத்தைத் தரிப்பான் என்ற ஏக்கம் என்பதாதிய ஆசாரங்களையும் வாழ்க்கையையும் பற்றியிருக்கிறாள். இவ்வித வாழ்க்கைக்கும் ஆசாரங்களுக்கும் காரணம்? ஸ்திரீ ஜாதியினிடத்துக் கடுமையான அவநம்பிக்கையும் சந்தேகமுமே. விவாகமாகாத எந்த யௌவன ஸ்திரீயும் மதிற்சுவர்க் காவலின்றித் தன் கற்பழியாதிராள் என்ற வெட்கத்துக்குரிய கொள்கையை உறுதியாகப் பற்றியிருக்கிறார்கள் நமது ஜனங்கள். மதிற் சுவரிருந்தாலும் விவாகமின்றி எந்த யௌவன ஸ்திரீயும் ஒழுங்காயிருத்த லியலாது என்று நம்புகின்ற சகோதரி சகோதரர்களும் இருக்கின்றனர். ஐயோ! இதர தேசங்களில் மதிற் சுவர்க் காவலின்றி, சுயேச்சையாகப் பலவிடங்களிலும் உலாவுகின்ற இலட்சக் கணக்கான பெண்களனைவரும் ஒழுக்கங் கெட்டவர்களா எனக் கேட்பின் 'ஆம்' என்று குருட்டுத்தனமாகக் கூசாது கூறும் விவேகிகளுமிருக்கின்றனர்.

இவ் வினுவிற்கு மற்றும் பலரோ, "மற்றத் தேசங்களின் கன்னிகைகளின் கற்பைக் காக்க மதிற் சுவர் ஆவசிகமில்லாமலிருக்கலாம். அந்த அநாவசிகம் அவர்கள் தேசத்திற்குப் பொருந்தியது. நமது நாட்டிற்கோ மதிற் சுவர் கன்னிகைகளுக்கு அத்தியாவசிகம். அந்த ஆவசிகம் நமது நாட்டிற்குப் பொருந்தியதாயிருக்கிறது" என்றறைகின்றூர்கள். இவ் வுத்தாத்தைச் சற்றுக் கவனிப்பின், "இதா தேசத்துக் கன்னிகைகளை விட நமது நாட்டுக் கன்னிகைகள் உள்ளப் பரிசுத்தமுற்றிருப்பதிலும் நிறை காத்துக்கொள்ளுந் தன்மையிலும் மிகக் குறைந்தவர்களாயிருக்கிறூர்கள். கோஷாத்திரையால் மூடப்பெருத அந்நிய நாட்டுக் கன்னிகைகளின் ஆசாரத்தை நாம் அநுஷ்டித்தால் ஐயோ! மானக்கேடும் விபசாரமும் நமது சமூக முழுவதும் பாவிப் பெருங் கேட்டை விளைவிக்கும்" என்றேற்படுகின்றது. சகோதரி சகோதரர்காள்! இது முற்றுந் தப்பான அபிப்பிராயம். இவ்வாறு உரைத்தற்காகப் பலரும் என்னை வெறுத்து நிந்திக்கக்கூடும். ஆனல் எல்லோரும் அமர்ந்து ஆழ ஆலோசித்துப் பாருங்கள். நமது சக்தியும் நமது பெருமையும் நன்றாய் நாம் அறிந்துகொள்ளவில்லை. சீதை, பாஞ்சாலி சந்திரமதி, தமயந்தி, சாவித்திரி, நளாயினி, வாசுகி, ஒளவை, தடாதகைப்பிராட்டி, மங்கையர்க்கரசி, காரைக்கா லம்மையார் என்ற புனிதவதி முதலிய எத்தனையோ உத்தமப் பெண்மணிகள் வாழ்ந்த பூமி இந்த நாடு. தோகையர் தூய்மையோடிருக்குந் தன்மை ஏனைய தேசங்களை விட இந்தத் தேசத்திற்கே விசேஷமாக இயைந்தது. ஆனல் சென்ற சில நூற்றூண்டுகளாக நமக்குள் ஏற்பட்ட சில ஆசாரங்களால், சமூகத்தின் தன்மையை அமைக்கும் சக்தியுடைய ஸ்திரீ ஜாதியை இழிந்தவர்களாக நாம் கருதிவிட்டோம். அவர்களிடத்தில் எப்பொழுதும் அவநம்பிக்கையும் சந்தேகமுங் கொண்டவர்களாயினேம் "தற்காலம் பதிவிரதை ஜகத்தில் இல்லவேயில்லை." "ஆலகால விஷத்தையும் நம்பலாம் .... சேலைகட்டிய மாதரை நம்பினல் தெருவில் நின்று தியங்கி விழிப்பரே" என்பனவாதி மொழிகள் நமது உயிர்க் கொள்கைகளாயின. ஐயோ அம்மா! இவைகள் தாம் உண்மையில் நமது தற்கால இழிந்த நிலைமைக்குக் காரணம். வீணுக என்னென்னவோ விஷயங்களைக் காரணமாகச் சொல்லி நோவானேன்?

(இன்னும் வரும்.)

(குறிப்பு.) இவ் வியாசத்திற் சொல்லப்பெறும் எந்த விஷயமும் யார் அபிப்பிராயத்திற்கேனும் பொருந்தாதிருப்பின் அன்னேர் அவ் விஷயங்களை மறுத்துத் தங்கள் ஆக்ஷேப சமாதானங்களை வெளியிடுமாறு கோருகின்றேன்.)

மங்களம்.

169

தமிழின் பெருமை.

* மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

செந்தமிழ்ச் செல்வர்காள்!

யான் தமிழின் பெருமை யென்பதைப்பற்றி என் சிற்றறிவுக் கெட்டியவாறு இக் கலைமகளிடங் கழறுகின்றேன். குற்றங்கடிதல் ஆன்றோர் கடன்.

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை என்பது பொருள். இனிமை யெனப் பொருள்படும் தமிழ் என்னும் பண்புப்பெயர் ஆகுபெயராகி அதனையுடையதோர் மொழியை யுணர்த்திற்று. அம்மொழி முதன் முதல், பசுபதியாகிய சிவபெருமானால், ஆன்மாக்கள் தன்னை வழிபட்டு வாழ்த்தி யுய்யும் வண்ணம் அருளிச் செய்யப்பட்ட மொழிகளுள் மிக்க இனிமையை யுடைத்து. ஆகவே, தமிழ்மொழிக்கு முதலாசிரியர் கைலாசபதி என்பது பெற்றாம்.

‡ "இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பு
மிருமொழியு மான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ."

என்ற ஆன்றோர் கூற்றே இதற்குச் சான்றாமென்க.

தமிழி னினிமையை, § "ஒண்டீந் தமிழின் றுறைவாய்" என்று நமது மணிவாசகப் பெருமானும்,

¶ "உளங்கனி மூவர் செய்யு ளொத்தமுக் கனியு மேனோர்
வளங்கெழு தொடர்பு போலு மற்றைய பழமுந் தூர்த்தார்."

† "இனித் தமிழினிமையாவர்க் கெடுத்திசைத் திடுவமன்னோ"

† "அமுதூறழ் தமிழ்" என்று சிவப்பிரகாச சுவாமிகளும் திருவாய் மலர்ந்த செய்யுட்களி னடிகள் நன்கு விளக்கும். இன்னும், கண்ணுதலார் அத் தமிழ்ப் பாக்களைத் திருச்செவியினால் கேட்டு இன்ப மனுப

---

* சீகாளத்தி புராணம். ‡ காஞ்சிப் புராணம். § திருக்கோவையார் 20. ¶ பிரபுலிங்கலீலை — ஆரோகணகதி. † காளத்தி புராணம் — நக்கீரர் சருக்கம்.

விக்கும் பொருட்டே தெற்கு நோக்கி நடனஞ் செய்கிறார் என்பதை, கீழ்வரும் ஆன்றோர் மொழி நன்கு அறிவுறுத்தும்.

‡ கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி
யடுக்க வந்துவந் தாடுவா னுடலி னிளைப்பு
விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி
மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றே.

அன்றியும், கறை மிடற்றண்ணல் தமது திருச் செவிகளைத் தமிழ்ப் பாக்களுக்கு ஓர் உறைவிடமாய்க் கொடுத்துள்ளார் என்பதற்குக் கீழ் வருந் தொடர்கள் நற்கரியாகும்.

⁕ "நீடுபே ரறிஞர் தம்பா நிரப்பிய செவியில்"

† "பசித்தழு ஞானப் பாலுண் மழவு
மேற்றொடு சூல மேற்றதோ ளரசு
மவிர்தரு செம்பொ னாற்றிடை யிட்டுக்
குளத்தி லெடுத்துக் கொண்ட கோவுங்
கனவிலு மமரர் காணரு நின்னைப்
பரிமா மிசைவரப் பண்ணிய முதலுங்
கரைதரு தமிழ்க்குக் காணி கொடுத்த
நின்றிருச் செவி."

மானிட சரீரத்துடன் மனிதர்கள் எய்துதற்கரிய திருக் கைலை யங்கிரியில் தமிழ் பேசப்பெற்றதென்பது கீழ்க் கூறும் பிரமாணங்களால் தெற்றென விளங்கும்.

1. காரைக்கா லம்மையாரை, "அம்மையே!" என்று பரமபதி அன்புட னழைக்க, நம் மம்மையார், "அப்பா!" என்று தோத்திரஞ் செய்த விடம் திருக் கைலாயமன்றோ!

2. சைவ சமயாசாரிய சுவாமிகளாய ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரை "சுந்தரா வந்தாயோ" என்று அன்புடன் அழைத்தது நமது கைலை நாயகர் அல்லவா?

3. நம்பி ஆரூரருடன் நொடித்தான் மலைக்குச் சென்ற சேரமான் பெருமாணயனார், உமாபாகர் திருமுன்பு பாடியருளிய "ஆதியுலா" சுத்த செந்தமிழன்றோ? இவைகளின் விரிந்த வரலாற்றைப் பெரிய புராணம் நன்குரைக்கும்.

‡ திருவிளையாடற் புராணம். ⁕ மண்ணிபடிக்கரைப் புராணம் – அவையடக்கச் செய்யுள். † வாட்போக்கிக் கலம்பகம் 1.

171

சிலர், "மேற்கூறிய பெரியோர்க ளனைவருந் தமிழ் நாட்டிற் குரியவர்கள். அவர்கட்கு வேறு பாடை தெரியாது. அவர்களுக்குத் தெரிந்தபாடையினனே அவர்களுடன் பரமர் பேசியருளினரே யொழிய, கயிலைமலை தமிழ் பேசப் பெறுவதல்ல" என்று கழறுவாருக்கு, அம் மலையிலிருந்து தெற்கு நோக்கி வந்த திருமூலநாயனர், வந்த நாட்டி லொருவரிடமும் தமிழ் பயிலாது, திருவாய் மலர்ந்த 'திருமந்திரம்' என்னு நூல் செந்தமிழ் அன்றே—என்று உத்தரம் உரைத்தல் வேண்டும்.

மதிநதி வாழுஞ் சடையார் தமிழ்ப் பாக்களைத் தமது அருமைத் திருக்கரத்தால் எழுதியுள்ளார் என்பதே தமிழின் ஏற்றத்தை நன்கு விளக்கும். திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூற்களை முற் றும் வரைந்துள்ளார் என்பதைக் கீழ்வருஞ் செய்யுட்கள் தெரிவிக்கும்.

* 1. அங்கவ ருரைத்த வெல்லா மம்பலத் தாடு மையர்
செங்கையி லேடு வாங்கித் தெளிவுற வரைந்த பின்னர்ப்
பொங்கிய வருளி ஞரும் புகன்றிட ரகலத் தையல்
பங்கினர் தம்மைக் கோவை பாடுதல் வேண்டு மென்றார்.

* 2. மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற
முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடிந்த பின்னர்ப்
பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்
மின்னென மறைந்தார் சொன்ன வித்தக ரயர்ச்சி கொண்டார்.

* 3. செந்தமிழ்க் கன்பு மிக்கார் சென்றுதம் மன்றி லெய்தி
யந்தரத் தவரை மாலை யயனைநன் முகத்து நாடி
நந்தமக் கடிமை பூண்டு நயந்தவ னொருவன் சொன்ன
விந்தநற் பாடல் கேண்மி னென்றவர்க் கருளிச் செய்தார்.

* 4. மெய்த்தவ வாத வூரன் விளம்பிட வெழுது மிந்தப்
புத்தக மன்று ளாடல் புரிந்தவ னெழுத்தா மென்று
முத்தியை யுதவுங் கோவை முடிவிடத் தெழுதிப் பின்னர்ச்
சித்திர மலர்க்கை யாலே திருந்தமைக் காப்புஞ் செய்தார்.

† "மாணிக்கவாசகர் வாய்மலர்க்கோவை வரைந்தவனே."

மேலும், § "மதிமலிபுரிசை" என்ற தலைப்பினையுடைய பாடலும்,

¶ "கொங்குதேர் வாழ்க்கை" என்ற முதலினையுடைய தொடையும்,

‡ "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்"

என்ற அடியினையுடைய வெண்பாவும்,

---

* திருவாதவூரடிகள் புராணம். † தில்லையந்தாதி 99. § பதி னோராந் திருமுறை. ¶ தனிப்பாடற் றிரட்டு. ‡ உமாபதி சிவாசாரி யார் வரலாற்றைப் பார்க்க.

இறையனுர் அகப்பொருட் சூத்திரம் அறுபதும் மழுவேந்து கையினரால் வரையப்பெற்றவை. இவைகளின் வரலாற்றைத் திருவிளையாடற்புராணமும், சந்தனுச்சாரியார் புராணமும் வெள்ளிடை மலைபோல் நன்கு விளக்கும்.

(வரும்.)

ப. தி. சோ. குமாரசாமி,

தருணீமணி.

2-வது அத்தியாயம்.

(வெண்டாமரை ௩, 117-ம் பக்கத் தொடர்ச்சி.)

தருணீமணியின் தயாள குணம்.

பொழுது புலர்ந்தது. இருவரும் பின்புறஞ் சமைய லிடத்திற்குச் சென்றனர். தருணீமணி அங்குக் காரியத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்தாள். சமையற் கட்டு மிகவும் சுத்தமாயிருந்தது. தூசி என்பதே தரையிலில்லை. தருணியோ, ஆச்சரியம்! இடையில் மெல்லிய சரிகைக் கரைபோட்டதோர் சுத்த வஸ்திரமும், தாவள்யமானதோர் இரவிக்கையும் தரித்து, சிறிய காதில் தோடும், கையில் இரு கனக வளையங்களும் அணிந்திருந்தாள். அவள்மீது வேறு யாதொன்றுமில்லை. தேவன் கூனன் இருவரும் உள் நுழைந்ததும், தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டு, புன்னகை புரிந்த முகத்துடன் எழுந்திருந்து தன் பெரியோரை வந்தித்து வரவேற்றனள் அந் நங்கை தருணீமணி. ஆயினும் அவள் கண்களில் நீர்த்துளி ததும்பி நின்றது.

இன்று தன் மாமன் தன் வேலையை நிறைவேற்றவேண்டிய தல்லவா? இஃதொன்றே அவளது அகத்தை ஊடுருவியதெனினும் மற்றோர் காரணம் அவள் துவர்ப்புக் கிண்ணத்தைக் கிஞ்சித்துப் பெருக்கியது. அதாவது தன் தோழன் கூனனும் கொலைத் தொழில் அப்பியசிக்கவேண்டி யிருக்கிறதே என்பதுதான்.

தயாளகுணமே உருக்கொண்டு வந்த அந்தத் தருணீமணி, தன் தோழனை மிகவும் பிரியத்துடன் நேசித்து வந்தனள். பிரதி தினமும் தன் தோழனது பரிதாப நிலைமையையும் தன் மாமனது கொடுமையையும் உன்னி யுன்னிக் கண்ணீர் சொரிவாள். கூனனே, தன் தோழி

யைத் தன் கண்மணியெனவே யனுராகத்துடன் நேசித்து வந்தான். தருணீமணியின் சமையற்கட்டே கூனனது பள்ளிக்கூடமாயிருந்தது. அங்கேயே படித்துவிட்டு இருவரும் பற்பல விடயங்களைப்பற்றிப் பேசிக் களிப்பர். சில சமயங்களில் பக்தி பரவசமாக்கும் பாடல்களை நம் பாவை, அவன் கேட்கப் பாடுவள். கூனனுக்கு அன்னவள் குரலிலேயே ஒரு பக்தி யுண்டு. "யாழினிது குழலினிது என்பர் என் தருணீமணி பாடலைக் கேளாதவர்" என்பான். கொம்புத்தேன் கிடைக்கப்பெற்ற முடவனேபோல் அகமகிழ்ந்து தினமும் ஆனந்த பரவசனுகிக் கூத்தாடி நிற்பான். அன்னையைத் தன்னறியாப் பருவத்தி லிழந்து ஆதரவு யாதுமின்றி, தன் பிதாவின் கொடுமைகளுக் கெல்லாம் ஆளாகி வருந்திக் கிடந்த அக் கூனனுக்கு, இவள் — ஒருவளே, ஊர் திரை வங்கத்து ஒடி மரம் பற்றி அலையுமோர் மீகாமனுக்கு, அடர்ந்த நல்லிருளில் ஆங்கு நின்றுதவும் ஆழியின் மத்தியிற் றிகழும் அருங்கல விளக்கமே (light house) போன்று அன்னவனுக்கு ஆதரவாயிருந்தவள். அவள் ஒருத்தியே அடர்ந்த முட் புதரினுள்ளிருக்கும் ரோஜாவின் தன்மையதுபோலுள்ள தன் தோழனின் விகார உருவத்தினுள்ளிருக்கும் குணத்தை நன்கு அறிந்தவள். ஆதலின், நம் கூனன் அவளிடம் அளவுகடந்த நேசத்துடன் அன்புற்றிருந்தான் என்பது வியக்கத்தக்கதன்று. தருணியைக் கண்டு மகிழ்வதும், தருணிக் கேதேனும் உதவிபுரிவதும், தருணியுடன் சம்பாஷிப்பதும் — அவனுக்குச் சுவர்க்க லோகம்போலிருந்தது. தன் தருணீமணியை — தன் னுருயிர் மணியை — தன்னுயிர்த் தோழியை — தன் தாயாம் சரஸ்வதியினை — தன் தந்தை கோபித்தபோது கூனன் படுந் துயரம், அவனை யுற்பவித்த ஆதியந்த மற்றுத் திகழானந்தப் பரமனுக்குத் தான் தெரியும். இம் மானிடக் குரங்கு அவ் வணங்கினை நேசித்தது வியப்பினும் வியப்பாம்! அவளனுராகம் அதினு மாச்சரியம் தாத்தக்கதே.

"தருணீ! கடைசியில் சம்மதிக்கச் செய்துவிட்டேன்" என்றான் தேவன் உற்சாகத்துடன்.

'ஆ'வென்று பெருமூச்செறிந்தனள் தருணி. தன் தோழனை யொருமுறை நோக்கினள். கண்களில் தன்னை யறியாமலே கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது.

"பக்கத்துத் தெருவில் பாலகிருஷ்ணன் கடையில் ஒரு கணக்குப் பிள்ளை தேவையாம்" என மெல்லச் சாற்றினள் மெல்லியள்.

தேவன் ஒருமுறை பார்த்தான். தருணீமணியின் கருத்து மறிந்தான். "அம்மா! தருணீ! உன் வேலையைப் பார்" என்றான்.

கூனனும் "நயினா! என்னவோபோலிருக்கின்றதே" என்றான்.

தருணீமணியும் தேவன்முன் வீழ்ந்து 'மாமா' என்றாள். கண்ணீர் பெருக, சால் கைகள் நடுங்க, விசனப் பெருக்கினால் வேறு வார்த்தை யொன்று முரைக்க வியலாது கீழே வீழ்ந்தனள். தேவனும் தருணீ மணியைத் தயவுடன் தூக்கி யுட்காரவைத்து உபசாரங்கள் பண்ணி மெல்லத் தேற்றி, தன் தனயனுடன் வெளியே போந்தனன்.

தருணியும் தியங்கித் தேம்பி யழ வாரம்பித்தாள்.

3-வது அத்தியாயம்.

முடிவுபெறாத கடிதம்.

ஆழிசூழ் உலகின் மாந்தர்தம் குறை தீர்ப்பான் கருதி, ஆதித்த னும் அருணனைச் சாரதியாகக் கொண்டு ககனத்தே தன் இரதத்தினைச் செலுத்தலாயினன் அன்னவர் விஜயஞ்செய்து ஆறுநாழிகை நேரம் இருக்கலாம். தருணீமணி தன் கரத்திருந்த புத்தகத்தைத் தன் னறை யுள் பத்திரப்படுத்திப் பின்னர் வெளியே செல்ல வாரம்பித்தனள்.

தருணீமணி தன்னிரு விழிகளினின்றும் தாரை தாரையாகப் பெருகிய கண்ணீரைத் தன் கரகமலங்களாற் றுடைத்துத் தன் துக்கத் தைத் தனக்குள் ஒருவாறு அடக்கிக் கடைத்தெருவினூடே சென்றனள்.

இவ ளிவ்வாறு செல்லலும், இவளுக்கு முகங்கொடுத்து முகமன் கூறித் தம் மனமுவந்து பேசுபவர் யாருமில்லை. சிறுபெண் பாவம்! தன்னந் தனியே, தன்னோடு பேசிக் களிப்பவர் யாரும் இன்றி, தன் னினுந் தாழ்குலத்து உதித்த மாக்கள் பல்வேறு விதமாய்த் தூற்றவும், "தருணி போகிறாள்! கொலைக்காரன் மருகி?" எனக் கண்டோர் கை கொட்டிக் கேலிகள் புரியவும், தான் இவற்றையெல்லாஞ் சகித்து யாதுஞ் செய்ய இயலாதவளாக இருக்கவும், அந்தோ! யார் செய்த பாவத்தின் பயனோ நம் பாவை இங்ஙனஞ் சிருட்டிக்கப் பெற்றதும்,

> "தக்கமுற் பவத்தி லான்ற தருமநன் கியற்றி னோர்கள்
> ஒக்கவிப் பவத்தி லின்ப மொருங்கனு பவிப்ப ரின்றேல்
> மிக்கவெந் துயரத் தாழ்வர்......"

என்பதும் நம் பாவைக்குப் பொருந்துமோ?

இவள் வீதியில் செல்லும்போது ஆசிகூறி நிற்பவர் யாருமில்லை. ஒருவரேனும் இவளை எதிரிட்டுப் பார்த்தவரிலர். கண்டவர் "கொலையாளி

யின் மருமகள் அல்லளோ?" எனக் கடிந்து அன்னவளைப் பஞ்சமரிலும் கீழ்ப்பட்ட பாதகியெனப் பகர்ந்து பறந்து சென்றனர். சிலர் "ஆ! அவள் மாமனுக்கு இன்று அலுவல்" என்று ஏசி ஏளனம் புரிந்து சென்றனர். தருணியின் முகாம்புஜத்தினின்றும் நீர்த் துளிகள் ததும்பி நின்றன.

கடைக்காரனும் நம் குமரியைக் கண்டும் காணுதவன்போல் நடித்து நின்றனன். "என்னவேண்டும்?" என்று கேளாத வண்ணமே தன் முகத்தைத் திருப்பி மற்றோர்புறம் நோக்கலாயினன். மற்றவர் முன் தன் முகத்தை மந்தகாசத்துடன் பொருத்தி முகமன் கூறும் மளிகை வியாபாரியும், நம் மெல்லியள் முன் வந்தபோது முகத்தைச் சுளித்து மற்றோர்புறம் நோக்கலாயினன். அந்தோ! அன்னவன் நம் மாதுமணியின் முகத்தினின்றும் உதிரும் முத்துத் துளிகளைக் கவனித்தானில்லை! ஏன்? ஏழைப் பெண் கொலைக்கார தேவநாயகன் மருகி யாகலான்.

நம் காரிகையும் தன் காரியம் முடித்துத் தன்னில்லம் ஏகினள். ஏகலும், தன்னைப்போன்ற ஏனையோர் சுகமேயிருக்கவும் தான் மாத்திரம் ஏகாங்கியாய் அநாதி நாதனன்றி ஆதரிப்பவர் யாருமில்லாது, பல்லோர் புறக்கணித்துப் பேசவும், எளியவரும் இரக்கமின்றி இகழ்ந்துரை செய்யவும், ஏனையோர் ஏளனஞ் செய்யவும் நிற்றலைக் கண்டு, தன்னை யுற்பவித்த தயாநிதியை நினைந்து உள்ளம் உருகலுற்றாள். தான் மேலான வேளிர் குலத்துதித்தும், தன்னினுந் தாழ்குலத்துத் தோன்றிய தீயர் தன்னைத் திரஸ்கரித்துப் பேசவும் தீனையாகத் தன்னை விட்ட தயாபரனைச் சின்னேரந் தன் அறிவு கலங்கித் தூஷிக்கலுற்றாள் நந் தருணீமணியும் சோகப் பெருக்கினால்.

தன்னில்லம் அடைந்ததும் தன் தையற் பெட்டியை எடுத்துத் தைக்க வாரம்பித்தாள். துக்கம் தொண்டையை யடைத்தது. ஊசியும் அன்னாள் கையில் ஏறித் தைத்தது. கண்காட்சியும் கண்ணீர்ப் பெருக்கினால் தகைக்கப்பெற்றது. தருணியும் தனக்குள் பின்வருமாறு சிந்திக்கலுற்றாள்.

(வரும்.)

R. வாசுதேவ சர்மா.

உலக வாழ்க்கை.

தேவாரம்.

"தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா றெங்ஙனே போமா றேதோ
மாயமா மிதற்கேது மகிழ வேண்டா
சிந்தையீ ருமக்கொன்று சொல்லக் கேண்மின்
றிகழ்மதியும் வாளரவுந் திளைக்குஞ் சென்னி
யெந்தையார் திருநாம நமச்சிவாய
வென்றெழுவார்க் கிருவிசும்பி லிருக்க லாமே."

எந்த உயிரும் பிறந்து இறந்து துன்புறுவதை நாம் அநுதினமும் பார்க்கின்றோம். ஆனதால் இவ்வுலக வாழ்க்கை நிலையுடையதல்லவென்பது அறிவுடையோரது அநுபவ சித்தமே.

உயிர் உடம்போடு கூடுதல் பிறப்பென்றும், உடம்பை விட்டுப் பிரிதல் இறப்பென்றுஞ் சொல்லப்படுகிறது. இந்தப் பிறப்பும் இறப்பும் சர்வ சீவர்களிடத்துங் காணப்படுகின்றன.

"நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை"

என்றார் தெய்வப் புலவனார்.

"இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே"

என்றார் தாயுமானார்.

ஆதலால் இவ்வுலக வாழ்க்கை, என்றிருந்தாலும் அழிவுடையதேயாம். உலக வாழ்வின் நிலை இப்படி இருக்க, சிலர் இந்த உலக முழுவதையும் தாமே தனித்து அரசாளவேண்டுமென்றும், வரம்பிலாத திரவியத்தையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் ஈட்டல் வேண்டுமென்றும், உயர்ந்த மாடமாளிகைகள் கட்டி அவற்றில் அழகிய மாதரோடு கலந்து சுகிக்கவேண்டுமென்றும் வரம்பிலாக் காதல்கொண் டுழல்கிறார்கள். இவை எல்லாவற்றோடும் பல்லாயிர ஆண்டுக ளிருப்பினும் நலமெனக் கருதுகிறார்கள். இவ்வுலக வாழ்வில் எட்டுணையேனும் ஆசை விட்டு நீங்கக் காண்கிலம். இவர்கள் தம் மடமை யென்னே!

177

"மண்டனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்டரு பூத பேத யோனிக ளியாவு மெல்லாங்
கண்டவிந் திரமா சாலங் களுக்கழு திரதங் காட்டி
யுண்டுபோ லின்றும் பண்பி லுலகினை யசத்து மென்பர்"

என்ற சிவஞான சித்தியாரானும் இவ்வுலக வாழ்வின் உண்மை நன்கு விளங்கும்.

ஒருயிர் கருவிற் பதிந்து வளருங்காற் படுந் துன்பத்தையும், யோனிவாய்ப்பட்டுப் பிறக்குங்காற் படுந் துன்பத்தையும், பிறந்து வளருங் கால் நோய்கள் வந்து வருத்த அதனாற் படுந் துன்பத்தையும், வளர்ந்து பெரியவனான பொழுது பொரு ளீட்டுதலால் படுந் துன்பத்தையும், பெண்டு பிள்ளைகளோடுகூடி வாழுங்காலத்து அவைகளை வைத்து நடத்துவதினால் வருந் துன்பத்தையும், அவ் வக்காலத்துத் தனக்கும் மனைவி மக்களுக்கும் வரும் நோய்களாற் படுந் துன்பத்தையும், வறுமையாலும் பகைவராலும் வருந் துன்பத்தையும், விருத்தாப்பியகாலத்தில் படுந் துன்பத்தையும், மரணகாலத்திலே வருந் துன்பத்தையும் சற்று உற்று நோக்குவார்க்கு, இவ்வுலக வாழ்க்கையில் இன்பம் சிறிதுமில்லை யென்பது எங்ஙனம் தெரியாமற் போகும்?

"அடுகரி தொடர வீழ வைந்தலை நாகங் காண
இடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ் வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதனின் றேனுக்
கிடைதுளி தேனக் கின்பம் போலுமிப் பிறவி யின்பம்."

இவ்வுலக வாழ்வுமாத்திரமன்று, இதன்மேலுள்ள விண்ணுலக வாழ்க்கை முதலியனவும் புண்ணிய பாவ கர்மங்களின் பயனாகிய இன்ப துன்பங்களை நுகருமிடமாய் உண்மையில் துன்பகரமேயாய்ப் பரமபந்தமாயிருக்குமென் றுணர்க.

இதுபற்றியே நமது குமாரகுருபரனார்,

"ஐந்தரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கு
மிந்திர னாகிவாழ்ந் திருப்பதோ வன்றே
மலரோ னாகி மன்னுயிர்த் தொகுதி
பலர்புகழ்ந் திசைப்பப் படைப்பதோ வன்றே
யடலரா வணையி லறிதுயி லமர்ந்த
கடவுளா யுலகங் காப்பதோ வன்றே

அவைதாம்

ஆரா வின்பமென் றரும்பெயர் பெறினும்
வாரா வல்வினை வருவிக் கும்மே"

என அருளினு ரென்க.

ஆதலின், அக் கன்மத் தொடர்பில் அகப்படாமல் நீங்கி உய்ய வேண்டும். அப்படி நீக்கி உய்விக்க வல்லது பரம கருணாநிதியின் திருவருளேயாம். ஒரு மனிதன் ஒரு மரத்தில் வைக்கோல் பழுதையைக் கட்டித் தொங்கவிட்டு அதில் ஊஞ்சலாடும்போது வைக்கோல் பழுதை யறுந்தால் அம் மனிதன் பூமியில் விழவேண்டும். அதைப்போல் நமக்குப் பிறப்பும் இறப்புமாகிய ஊஞ்சல் அறுந்தால் அக் கருணாநிதியின் திருவடியே யன்றி வேறு புகலிடமில்லை.

இவ் வுலக வாழ்க்கையை விடுதற்கும், வினைத் தொடர்பை நீக்கிக் கொள்வதற்கும், சிவானந்தாமிர்தத்தை நுகர்தற்கும் திருவருட் பேறே பெருஞ் சாதனமானதால், இவ் வுலக வாழ்க்கையில் முழுகி ஆழாமல் திருவருட்பேறு கிடைக்கும்படி இம்மையிலேயே முயலுதல் இம் மனிதப் பிறப்பின் பயனாகும்.

S. நடேசதேசிகர்,
தமிழ்ப்பண்டிதர், கோட்டுச்சேரி.

இலக்கணப் பகுதி.

தொண்ணூறும், தொளாயிரமும்.

ஒன்று, இரண்டு, மூன்று முதலிய சொற்களோடு, பத்து, நூறு என்ற சொற்கள் வரின், முறையே ஒருபது, இருபது, முப்பது, ஒருநூறு, இருநூறு, முந்நூறு எனப் புணரும். ஒன்பது என்ற சொல்லின் முன் பத்தும் நூறும் வரின், தொண்ணூறு, தொள்ளாயிரம் என வருகின்றன. ஒன்று முதல் எட்டு வரையில் உள்ள எண்ணின் பெயர்கள், பத்து நூறுகளுடன் புணரும்போது சில விகாரங்களே உண்டு. ஒன்பதுடன் பத்தும் நூறும் வருமொழிகளாய் வந்து புணரும்போது பெரிதும் விகாரமடைகின்றன.

இதற்கு விதி தொல்காப்பியத்தில்,

"ஒன்பானொகரமிசைத்தகரமொற்று
முந்தையொற்றேணகாரமிரட்டும்
பத்தென்கிளவியாய்தபகரங்கெட
நிற்றல்வேண்டுமூகாரக்கிளவி
யொற்றியதகரம்றகரமாகும்."

இ—ள். நிலைமொழியாகிய ஒன்பதென்னுஞ் சொல்லின் ஒகரத்திற்கு மேலாக, தகரம் ஒற்றாய் மிக்கு வரும். முன் சொன்ன வொகரத்தின் முன்னர், னகர வொற்று இரண்டு ணகர வொற்றாய் மிக்கு வரும். வருமொழியாகிய (பஃது அல்லது) பத்தென்னுஞ் சொற் றன்கட் பகரமும் ஆய்தமுங் கெட, நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர், ஊகாரமாகிய வெழுத்தினை நிற்றல்வேண்டும். வருமொழியாகிய பத்தென்பத னீற்றதன் மேலேறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப, ஒற்றாய் நின்ற தகரம் றகர வொற்றாகும். எ—று.

இஃது ஒன்பதும் பத்துமென நின்றான் முடியற்பாலவென்பது. பகர ஆய்தம் என்னாத முறையன்றிய கூற்றினான், நிலைமொழிக்கட் பகரக் கேடுங் கொள்க. குற்றியலுகரமும் அஃதேறிய மெய்யும் முன்னர் மாட் டேற்றாற் கெட்டன.

உ—ம். தொண்ணூறு.

(குற்றிய லுகரப் புணரியல் 39.)

"இச் சூத்திரத்தாலும், உரையாலும் ஒன்பது பத்து என்ற சொற்கள், தொண்ண் -|- ஊறு என மாறி நின்று புணரும் என்றேற்பட்டது."

"ஒன்பான்முதனிலைமுந்துகிளந்தற்றே
முந்தையொற்றேளகாரமிரட்டும்
நூறென்கிளவிநகாரமெய்கெட
ஊ ஆவாகுமியற்கைத்தென்ப
ஆயிடைவருதலிகாரரகாரம்
ஈறுமெய்கெடுத்துமகாரமொற்றும்."

இ—ள். ஒன்பதென்னுஞ் சொல்லின் முதனின்ற ஒகரம் மேற் பத்தென்பதனோடு புணரும் வழிக் கூறியவாறுபோல, ஒகர மிசைத் தகர வொற்று மிகும். அவ் வொகரத்தின் முன்னின்ற னகர வொற்று இரண்டு ளகர வொற்றாம். வருமொழியாகிய நூறென்னுஞ் சொல்லும் நகாரமாகிய மெய் கெட, அதன்மே லேறிய ஊகாரம் ஆகாரமா மியல்பை

யுடைத்தென்பர். அம் மொழியிடை ஓரிகரமும் ரகாரமும் வரும். இதற் கீருகிய குற்றிய லுகரத்தினையும், அஃதேறி நின்ற றகார வொற்றினை யுங் கெடுத்து, ஓர் மகரம் ஒற்ருய் வந்து முடியும். எ—று.

மெய்யென்றதனுன், நிலைமொழிக்கணின்ற பகரங் கெடுக்க.

(குற்றிய லுகரப் புணரியல் 57.)

உ—ம். தொள்ளாயிரம்.

என்று விரித்தார்கள்.

நன்னூலில்,

"ஒன்பானொடுபத்துநூறுமொன்றின்
முன்னதின்ஏனையமுரணியொவ்வொடு
தகாநிறீஇப்பஃதகற்றினவ்வை
நிரலேணளவாத்திரிப்பதுநெறியே"

(உயிரீற்றுப் புணரியல் 44.)

என்ற சூத்திர வுரையில் முரணி என்றதற்கு வருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முறையே நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து, என்று கூறி,

உ—ம். ஒன்பஃது + பத்து = (1) ஒன்பஃது நூறு, (2) தொன் பஃது நூறு, (3) தொன்நூறு (4) தொண்நூறு (5) தொண்ணூறு.

ஒன்பஃது + நூறு = (1) ஒன்பஃது ஆயிரம், (2) தொன்பஃது ஆயிரம், (3) தொன் ஆயிரம், (4) தொள் ஆயிரம், (5) தொள்ளாயிரம்; இது தொளாயிரமெனவும் வழங்குகின்றது.

'பஃதகற்றி' என்பதோடு பொருந்த 'ஒன்பஃதனொடு' என்னுமல் 'ஒன்பானொடு' என்றமையால், ஒன்பது நின்று புணரினும் இவ்விதியே பெறும். இப் புணர்மொழிகள் ஒகர உயிர் ஒன்று ஒழிய மற்றவையெல் லாம் விகாரப்பட்டுக் கிடந்தமையான் மரூஉவென்று கொள்ளாமல், தொல்லாசிரியர் முடித்தவாறே முடித்துக் காட்டினேமென்பார் 'நெறி' என்ருர். எனவும் விளக்கிக் காட்டி யிருக்கிருர்கள்.

இவை இங்ஙனமாக, தற்போது சிலர், தொண்ணூறு, தொள்ளா யிரம் என்பன, தொகை (பத்தென்ற தொகை) தள் நூறு. தொகை (நூறென்ற தொகை) தள் ஆயிரம். என்பனவற்றின் மரூஉவென்கின் றனர்.

சிலர், தொள் – குறைந்த என்று கொண்டு, தொண்நூறு – பத்துக் குறைந்த நூறு, தொள்ளாயிரம் – நூறு குறைந்த ஆயிரம் என இயம்பு கின்றனர்.

சிலர், தொன்று என்ற சொற்குப் பழமை என்று அர்த்தமிருப்பதால், தொன்று பத்து (அதாவது—பழைய பத்து) என்பது தொன்பது என் றிருக்கவேண்டியது மரூஉவாய் ஒன்பது என்ருயிற்று. அவ்வாறே தொன்று + நூறு = தொண்ணூறு, தொன்று + ஆயிரம் = தொள்ளாயிரம் என விகாரப்பட்டுப் புணர்ந்தன எனப் புகல்கின்ருர்கள்.

வேறு சிலர், தொண்டு என்ற மொழிக்கு ஒன்பது என்று அர்த்தம் இருத்தலினுல், ("தொண்டென்ப பழமை யொன்பான் ருெழும்பொடு வழிபாடாமே" என்பது நிகண்டு.)

தொண்டு + பத்து = தொண்ணூறு
தொண்டு + நூறு = தொள்ளாயிரம்

எனப் பத்தும் நூறும் முரணிப் புணர்ந்ததாக மொழிகிருர்கள். நிற்க,

மொழி நூலில், "தொண்டு (9) தொன்பது (90) தொண்ணூறு (900) தொள்ளாயிரம் (9000) என்னல் முறைமை. இவை பெரிதும் வேறுபட்டன.

தொண்டு + பத்து = தொன்பது
தொண்டு + நூறு = தொண்ணூறு
தொண்டு + ஆயிரம் = தொள்ளாயிரம்.

தொண்டு, தொன்பது முதலியன தெலுங்கில் முறைமையாக வழங்குகின்றன" என்றனர் திருமாகறல் ஸ்ரீ கார்த்திகேய முதலியாரவர்கள். தமிழ் மொழி வரலாறென்னும் புத்தகத்தில், ஸ்ரீ சூரியநாராயண சாஸ்திரியாரவர்களும் மேலதை ஒருவாறு வலியுறுத்தினுர்கள். எமது நிச்சயமும் இதுவே.

தொண்டு – தொன்பது முதலிய மொழிகள் தொல்காப்பியம் உண்டாவதற்கு முன்னமே மாறுபட்டு வழங்கின. "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பல்" என்றபடி, தொல்காப்பியனுரும் வழங்கின மொழிகட்கு விதி கூறினர்போலும். நன்னூலாரும் முன்னூலில் முடிந்தபடி முடித்துக் காட்டினர்.

வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர், பாகூர்.

சாத்திரப் பகுதி.

ஈசுவர நிச்சயம்.

ஆஸ்திகர்களும், நியாய முதலிய தரிசனக் கிரந்தங்களைப் படியாமல் துரதிருஷ்டத்தால் பிராந்தர்களான நாஸ்திகஜன சம்பர்க்கத்தையடைந்து அதனால் கலங்கிய புத்தியுடையவர்களுமான நம் சகோதரர்களின் பொருட்டு, நியாய நூலின்கண் கூறப்பட்டுள்ள அநுமான வடிவ ஒன்பான்வித யுக்திகளால் கடவுள் நிர்ணயஞ் செய்யப்படுகின்றது.

இப் பிரசங்காரம்பத்தில் ஈசுவரனது சொரூபம் இத்தன்மையதெனக் கூறவேண்டிய தவசியமாகும்.

எவ் வஸ்துவை நிச்சயம் செய்யத் தொடங்குவோமோ அவ் வஸ்துவின் சொரூபம் அறியப்பட்டிராவிடின் "சித்தி செய்யப்பட்ட வஸ்து இது" என்னும் உணர்வு உண்டாகாது. ஆகலின் ஈசுவரனது சொரூப ஞானம் உண்டாம் பொருட்டு முதற்கண் நியாய ரீதியாய் ஈசுவரனது இலக்கணம் கூறப்படுகின்றது, இலக்ஷணப் பிரமாணங்களாலேயே ஒன்றன் சொரூப ஞானம் பெறப்படல் வேண்டுமாகலின்.

ஈசுவரனது இலக்கணம்.

நித்திய ஞானம், நித்திய இச்சை, நித்திய முயற்சி இவைகட்கு எப்பொருள் நிலைக்களமோ அப் பொருள் ஈசுவரனெனப்படும்.

ஈசுவரனது ஞானம், இச்சை, முயற்சி என்னும் இவை நித்தியமும், ஓர் வியக்தியும், சர்வ ஜகத்தையும் விஷயஞ் செய்வதுமாயுள்ளது.

ஈசுவரன் ஒருவர், விபு, நித்தியர்.

ஈசுவரனிடத்தும் ஜீவனிடத்தும் ஒரே ஆத்மத்தன்மை ஜாதியிருப்பதால் ஈசுவரன் "பரமாத்மா" என ஆத்ம சப்தத்தால் சுருதியாதிகளால் கூறப்படுகிறார்.

(இன்னும் வரும்.)

ஓர் ஆஸ்திகன்.

183

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஒளஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத

ஒளஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில்சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஒளஷதங்கள்.

26. சுகந்த மூக்குத்தூள்:— இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்ருய்க் கலந்துகொண்டால், அந்தத் தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனுவசியம். இந்த தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம்போகாமல் இருப்பதுமன்றி, சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர் பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியன தீரும். இதில் நவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கி, சதா கமகமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இந்த தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து, கடைசியில் சிலர் தூள்

184

போகும் அப்பியசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்குச் செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒரு மாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4. 1 முதல் 4 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம். 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம். 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 6 பிரத்தியேகம்.

27. அசோக கிருதம் :— ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலை நோய் உண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு, தேகங் கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப்போகுதல் முதலிய ரஜோ தோஷங்களும், யோனி சுருக்கம், யோனிப் புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம். சூதக சூலை ரோகங்களுக்கும், மற்றும் அநேக யோனி சம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1 அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

N. B.— என்னுடைய ஔஷதசாலையின் ஹெட் ஆபீசை பறங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டபடியால் இனி எல்லா ஆர்டர்களும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பறங்கிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.

185

சந்திரசேகரன் சரித்திரம்.

இஃது ஓர் மகானுபாவனால் எழுதப்பட்ட "திரிகால மாயப் பிரசன்ன நவீனம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது புத்தகம். இப் புத்தகம் இடைக்கிடையே சந்தர்ப்பத்திற் கேற்ற வர்ணமெட்டுகளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கதை படிக்கப் படிக்க இன்பந் தருவதுமன்றி, ஆண்மக்களும் பெண்மக்களும் உலகத்தில் அறிந்து நடக்கவேண்டிய நீதி பலவற்றைக் கற்பிக்கும் ஓர் உத்தம ஆசிரியன் போன்றும் விளங்குவது. எந்த மதத்தினர்களும், ஆண் பெண் சிறுவர் முதலியயாவர்களும் படித்துப் பயனடையும்படி மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பலவிதமாகச் சொல்வதிற் பயனென்னை? உண்மையில் இப் புத்தகம் படிப்பவர்களுக்கே இதன் இன்பம் விளங்கும்.

புத்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் மிக அழகாக அச்சிட்டு பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அணா 6.

ஜெகசேகர சத்தியவதனி.

மேற்கூறியதுபோலவே இதுவும் "பஞ்சாஸம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு நாவல்.

இதன் விலை அணா 12.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி முற்பண மனுப்பியேனும், வி. பி மூலமாகவேனும் பெற்றுக் கொள்ளலாம்.

பொன். நல்லத்தம்பிமுதலியார்

No. 34. ஆநந்தரங்கப்பிள்ளை வீதி,

புதுச்சேரி.

186

முக்கிய கவனிப்பு.

உயர்ந்த புகையிலை! ——— உத்தரவாதமான போடி!!



எமது அன்பும் பிரியமுமுள்ள நேயர்களுக்கு தெரிவிப்பது யாதெனில்: பட்டணத்திலிருந்து வரும் அநேக விதமான பொடிகளை உபயோகித்து அதனுடைய சுகத்தை அனுபவித்து வருகின்றீர்களல்லவா? ஆகையால், நாங்களும் விசேஷலாபத்தைக்கோராமல் ஒருவிதமான சிநேக வசியமெனும் நசிய உல்லாச புகையிலைப் பொடியை தயாராக்கி வைத்திருக்கின்றோம். வேண்டியவர்கள் எமது விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். உயர்ந்த புகையிலையோடு அளவாய் சுண்ணாம்பும் நெய்யும் கலக்கப்பட்டது. இதைப்பற்றி நாங்கள் விரிவாக எழுதுவதற்குப் பிரியமில்லை. ஏனென்றால் இப்பொடியை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் அதன் பயன் தெரியவரும். வெளியூர்களுக்கு வி. பி. மூலமாய் அனுப்பப்படும். மற்ற விஷயங்கள் ஏதேனும் வேணுமென்றால் கடிதமூலமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

மூக்குத்தூள் விபரம்.

	ரூ.	அ.	பை.
பொடி, வீசை 1-க்கு	3	0	0
,, சேர் 1 ,,	0	10	0
சுகந்தமூக்குத்தூள் டஜன் 1-க்கு	2	4	0
ஷி சாம்பில் ,,	0	6	0
மக்குவா, கொட்டை ,,	0	12	0

பொடிடப்பிகளும், பொடிபுகையிலைகளும் விற்கப்படும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மேல் விலாசம்:—

சுபீரியர் சினப் கம்பெனி,

நெ. 4, தாண்டவராயப்பிள்ளை தெரு,

ஜார்ஜ் டவுன், மதராஸ்.

187

சோதிட விளம்பரம்.

மந்திரேசுவரியம் என்னும் பலதீபிகை:— இந்நூல் ஸ்ரீமந்திர முனிவரால் முன்னூல் பலவற்றுணின்றும் தொகுத்தெழுதப் பெற்ற 900 சுலோக வியாக்கியானங்கள் கொண்டதாய், இதர நூற் பிரமாண வியாக்கியானங்கள் 600 சேர்க்கப்பெற்றதாய், உயர்ந்த கடிதத்தில் சுமார் 300 பக்கங்கட்கு மேற்கொண்டதாய், செந்தமிழ் நடைபொருந்திய அதி சுலப வசனங்களால் ஆக்கப்பெற்றதாய், விலை ரூபா ஒன்றேகாலுடையதாய், சோதிடம் பயின்றோரும் பயிலாதோரும் எளிதி லறியுமாற்றலுடைபதாய், நாரதீய கார்க்கேய கேரள முதலிய நூற் கருத்துக்களையும் பாராசரர் பாஸ்கரர் முதலாயினோர் கருத்துக்களையும் தன்னிடத் துடையதாய், கால புருஷ அங்கம் முதல் லத்தா பலன் வரை விரித்துரைக்கத் தக்கதாய் வெளிவந்திருக்கின்றது. இது ஒவ்வோர் சோதிடரகத்தும் அத்தியாவசிகமாக இருத்தற் குரியது. சோதிடச் சார்பாய ஒவ்வோர் விடயத்தையும் நுண்ணிய கருத்துடன் தெரிவிக்க வல்லதும் அத்துணை விஷயங்களை யெல்லாம் அடக்கிவைத்துள்ளதுமான இந்நூலே சோதிடக் களஞ்சியமாம். குறைந்த விலைக்கு நிறைந்த பொருள் கொள்வார்க்கு இதுவே ஏற்ற சமயம்.

சோதிட கணிதம்:— இது ஒன்றுதான் சுதேச விராசிமானங்களைக் கணிக்கத் தக்க நல்ல வழியினையும், நவக்கிரக ஸ்புட நெறியினையும், இன்னும் பல்வகைத் துறையினையும் காட்ட வல்லது. இஃதொன்றைக்கொண்டே சோதிட சாஸ்திர உள்ளுறையனைத்தையும் அறியவேண்டுமாகலின் இனிய வசனங்கள்செறிந்து சுலப வழிகாட்டியாயுள்ள இதனை யாதரித்து அகமகிழவே ஆறணு விலைக்குக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

புட்ப பந்தம்:— மழை வளங் கூற வல்லது. விலை அணு நான்குள்ளது. விருஷ்டி வேறுபாட்டினை உரைக்க வல்லது. ஒவ்வோர் கிரகச் சேர்க்கையாலும் இத்துணைத் தூரம் மழை பொழியும் பொழியாது என இன்மை உண்மை கூறவல்லது. 500 சுலோக அருத்தங்கள் கொண்டது. மாரி குன்றுமை கூறிக் கிருஷிகரை இன்னின்ன வகை வேளாண்மை புரிகவெனத் தூண்டக் கூடியதாகலின் இஃதும் இன்றியமையாத தொன்றேயாம்.

சு. ஏ. குமாரஸ்வாமியாசாரி,

ஏகாம்பர ஆசாரி வீதி, பறங்கிப்பேட்டை.

188

இந்தியாவின் தத்துவஞானம்.

பிரம்மஸ்ரீ ஜீ. ஸீ. ஷட்டர்ஜீ அவர்களால் ப்ருய்க்ஸேல் நகரத்தில் 1898-ம் ஆண்டில் பிராஞ்சுப் பாஷையில் உபந்யஸிக்கப் பட்டது. புதுவை பிரமக்ஞான சபை அங்கத்தினரும் பொது வேலைகள் ஓவர்சியருமாகிய வே. கு. அநந்தநாயகநாயகரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் நல்ல அச்சில் இயற்றப் பெற்றுள்ளது.

டபிள் க்ரௌன் சயிஜில் (1௵ 16) 12½ பாரம் (200 பக்கம்) கொண்ட புத்தகம் 1௵ விலை அணா 6. வி. பி. சார்ஜ் அணா 3. வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற் கெழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்,

சைகோன் சின்னையா பிரஸ், புதுச்சேரி.

To Let.